அறிமுக நூல் – 11

# பட்டினப்பாலை



இரா.இளங்குமரனார்

அறிமுக நூல் வரிசை – 11

# பட்டினப்பாலை

இரா. இளங்குமரன்

# அறிமுகத்திற்கு அறிமுகம்

தொடக்க நாளிலேயே 'செந்தமிழ்' எனப்பட்ட நம்மொழி, இப்பொழுது 'செம்மொழி' என்னும் சிறப்பை நடுவண் அரசால் அடைந்திருக்கிறது. அத்தகுதிக்குக் காரணமாக இருந்த நூல்களை எல்லாம் இளம்பருவ மாணவர்களும், ஓரளவே தமிழ்ப் பயிற்சியுடைய பெரியவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் 'அறிமுகநூல்கள்' வெளியிட வேண்டும் என்று அவாவினார், அன்புத் தோன்றல், செயல்வீறுமிக்க தன்மானத் தமிழர், புரட்சிக் கவிஞர் மன்ற நிறுவனர் தமிழ்த்திரு **பி.வரதராசனார்.** அவர் விருப்பை நிறைவேற்றும் வகையிலும், என் எண்ணப்பதிவும் அதில் ஒன்றியதாலும், தொடர்ந்து செம்மொழிக்கு உரியவும் பிறவகையால் தமிழ்வளமாவதுமாம் கலை வள நூல்களையும் அறிமுக நூல்களாக வெளியிட இசைந்தேன்.

அவ்வரிசையில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை எனத் தொடர்கின்றன.

முன்னைத் தொல்காப்பிய, திருக்குறள் அறிமுக நூல்கள் பெற்ற வரவேற்பும், அவ்வெளியீட்டில் கண்ட விற்பனைப் பெருக்கமும், பருகுவார் போல் கேட்ட அவையச் சிறப்பும், பரப்புதல் உந்துதல் அவர்களுக்கு உண்டாகிய தமிழ்ப்பயனும், நூலாசிரியனுக்கும், வெளியீட்டினர்க்கும் பேருவகை ஆவதாம்! 'தமிழ்மொழி' 'இனமீட்பர் பெருகுவர்' என்னும் நம்பிக்கையைப் பெருக்குதல் நற்பேறாம். ஆதலால், இத்தொடர் தொய்வின்றித் தொடர்வதுடன், பெருக்கத் தொடராகச் சிறக்கத் தூண்டும் என்பதும் உறுதியாம்.

பரப்பாளர் என்பார், புரப்பாளருமாம் சிறப்பு வெளிப்பாடு இஃதாம்.

வாழிய நலனே!


வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,

நாள்
22-02-2015

**இரா.இளங்குமரன்**
திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர், திருச்சி-620 101

## வெளியிட்டு மகிழும்




## புரட்சிக் கவிஞர் மன்றம்

75, வடக்குமாசி வீதி, மதுரை-1

அலைப்பேசி : 94437 10219

## அச்சிட்டு மகிழும்






# மணியம்மை

## மழலையர் தொடக்கப்பள்ளி

வடக்குமாசி வீதி, மதுரை–1

தொலைப்பேசி : 0452 2626111

# பட்டினப்பாலை

**★ பட்டினப்பாலை என்பதன் பொருள் என்ன?**

பட்டினம் = காவிரிப் பூம்பட்டினம்.

பாலை = பாலை ஒழுக்கம் எனப்படும் பிரிவு.

காவிரிப் பூம்பட்டினத்தையும் பிரிவு ஒழுக்கத்தையும் கூறும் நூல் பட்டினப்பாலை எனப்பட்டது.

**★ பட்டினம், பட்டணம் என்பவற்றின் வேறுபாடு என்ன?**

கடற்கரை சார்ந்த பேரூர் பட்டினமாகும்.

உள்நாட்டில் அமைந்த பேரூர் பட்டணமாகும்.

முன்னதிலும் பின்னதிலும் 'பட்டு' உண்டு. அணம், இனம் என்பன, வேறுபடுகின்றன. இனம் என்பது தொகுதி தொகுதியாக அமைந்தது; அணம் என்பது (அண் + அம்) செறிந்து அமைந்தது.

பட்டி, பட்டு என்பன ஊர்ப் பெயர்களாக இருப்பன.

எ-டு: மேட்டுப்பட்டி, கோயில்பட்டி

செங்கழு நீர்ப்பட்டு (செங்கல்பட்டு), சேற்றுப்பட்டு.

**★ பட்டினப்பாலையின் வேறு பெயர் என்ன?**

பட்டினப்பாலையின் வேறு பெயர் வஞ்சி நெடும்பாட்டு என்பது. அகவலால் ஆய அப்பாட்டு அகவலடிகள் நூற்றுமுப்பத்தெட்டு வஞ்சி அடிகள் நூற்று அறுபத்து மூன்று. ஆக முந்நூற்று ஓர் அடிகளைக் கொண்டுள்ளமையால், வஞ்சியடிகளின் மிகுதி கருதி வஞ்சி நெடும்பாட்டு எனப்பட்டதாம்.

**★ பட்டினம்பாலையைப் பாடியவரும் பாடப்பட்டவரும் எவர்?**

பட்டினப்பாலையைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்பார். பாடப்பட்ட வேந்தன் திருமாவளவன் என்பான். கரிகாலன் என்பானும் அவன். கண்ணனார் பெரும்பாணாற்றுப் படையைப் பாடியவரும் ஆவர் என்பதை முன்னரே அறிந்துள்ளோம். பெயர் விளக்கமும் அங்கே சொல்லப்பட்டதே.

**★ கரிகாற் பெருவளத்தான் இப்பத்துப்பாட்டில் எவரால் எப்பாட்டுப் பாடப் பெற்றான்?**

கரிகாற் பெருவளத்தான் முடத்தாமக் கண்ணியாரால், பொருநராற்றுப்படையில் பாடப்பட்டுள்ளான். பத்துப்பாட்டில் இரண்டு பாடல் பெற்றவன் கரிகாலன்; இரண்டு பாடல் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். கரிகாலன் பெயர் விளக்கம் பொருநராற்றுப்படையில் கூறப்பட்டதாம்.

**★ காவிரிப் பூம்பட்டினத்தைப் பாடுபவர் காவிரியை விரித்துப் பாடுவது ஏன்?**

காவிரி புகும் இடத்தில் அமைந்தது தானே காவிரிப்பூம்பட்டினம். அதன் வளம்தானே சோழர்களை வளவர் ஆக்கியது. ஆதலால் அதனை விரித்துப் பாடல் மிகத் தக்கதாம்.

**★ காவிரி வளத்தைக் கண்ணனார் எப்படித் தொடங்குகிறார்?**

சுக்கிரன் என்னும் வெள்ளி கிழக்கில் இருந்து மேற்காகச் சென்றால் மழை பெய்யும்; அந்நிலை மாறித் தெற்காகச் சென்றால் மழை பெய்யாது என்பர். வானம்பாடி என்னும் பறவை வான் துளியுண்டு வாழ்வது, அது மழைநீர் இன்றி வருந்தும் நிலையில் மழை பெய்யாது என்பர். இத்தகு நிலைகளிலும் காவிரிப் பெருக்கு அற்றுப் போகாமல் மேல் மலையில் இருந்து கீழ்கடல் வரை பெருகி ஓடும் என்று தொடங்குகிறார்.

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி" (5-6)

★ **காவிரியின் புனல் பெருக்கால் பொன் கொழிக்கும் என்பதன் விளக்கம் என்ன?**

பொன் கொழித்தலால் தானே காவிரிக்குப் 'பொன்னி' என்று பெயரும் உண்டாயது. நெல் நிறம், பொன் தானே! நெல்லும் கரும்பும் வாழையும் பெருக விளைந்தால் பொன் தராவா? காவிரி வழங்கும் செல்வ வளம் குறித்தே பொன் வழங்கும் (கொழிக்கும்) என்றார்.

★ **காவிரியின் வளப் பெருக்கை எவ்வாறு கூறுகிறார் ஆசிரியர்?**

காவிரி நீர்ப் பெருக்கால் விளைவு இடையறாது பெருகும்.
கரும்பாலையின் புகையால் நெய்தல் பூ வாடும்
காய்த்த நெல்லின் கதிரைத் தின்று பெரிய எருமையின் கன்று
நெற் கூடுகளின் நிழலில் தங்கும்; உறங்கவும் செய்யும்.
குலைகளையுடைய தென்னை போல்
வாழை உயர்ந்திருக்கும்;
மஞ்சள் பயிர், கமுகினைப் போல் காட்சி தரும்;
மாமரம், பனை, சேம்பு, இஞ்சி முதலியவை செறிந்திருக்கும்
என்கிறார்.

★ **பாக்கங்களின் சிறப்பாக ஆசிரியர் கூறுவதென்ன?**

வீட்டு முற்றத்தில் மகளிர் நெல்லை அவித்துக் காயப்போட்டுள்ளனர். அந்நெல்லைத் தின்ன வரும் கோழிகளைக் காதில் அணிந்த குழை என்னும் அணிகலத்தைக் கழற்றி எறிந்து ஓட்டுகின்றனர். அதனால் அக்குழைகள் தெருவில் சிதறிக் கிடக்கின்றன. இளஞ் செல்வச் சிறுவர்கள் நடை வண்டி ஓட்டுகின்றனர். அவ்வண்டி தடங்கல் படுமாறு குழைகள் செய்கின்றன. இப்படிப்பட்ட இடர் அன்றி வேறு இடர் அறியாதது பாக்கம் என்று பாக்கச் சிறப்பைக் கூறுகிறார் ஆசிரியர்.

**★ உப்பு வணிகம் பற்றி அறிவது என்ன?**

கடல் விளை உப்பை எடுத்துப் பல ஊர்களுக்கும் கொண்டு சென்று வாணிகம் செய்தலால் பண்ட மாற்றாகப் பெறப்பட்ட நெல்லை ஏற்றிய படகுகள், வரிசையாகக் கட்டப்பட்ட குதிரைகளைப் போலக் காட்சி தரும் அங்குள்ள கழிமுகங்கள்.

**★ காவிரிப் பூம்பட்டினச் சூழல் எத்தகையது?**

பொழில்கள், சோலைகள், பொய்கைகள், ஏரிகள் ஆகியவை அமைந்த சூழலை உடையது காவிரிப்பூம்பட்டினம்.

**★ காவிரிப் பூம்பட்டினக் குடியிருப்புகளை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார்?**

கதவுகளில் புலியுருவம் பொறிக்கப்பட்டிருக்கும்; செல்வ வளம் மிக்கதாக வீடுகள் இருக்கும்; அறம் சிறந்தவர்களாக மக்கள் இருப்பர். அவர்கள் சமைத்து வடித்த வடிகஞ்சி ஆறுபோலச் செல்லும்; அங்கு மாடுகள் சென்று மிதித்தலால் சேறாகிவிடும்; அச்சேற்றின் மேல் தேர் ஓடுதலால் புழுதியாகப் படரும்; அப்புழுதி வனப்புற வரையப்பட்ட சுவர் ஓவியங்களில் படியும்; அதனால் வெண்ணீற்றில் புரண்ட யானை போல் அவை காட்சி தரும். வீட்டு முற்றத்தில் கேணிகளும், தவச்சாலைகளும், வேள்விச் சாலைகளும் விளங்கும். வேள்விப் புகையால் வெறுப்புற்ற புறாக்களும் குயில்களும் பெட்டைகளுடன் அகன்று போகும் என்று கூறுகிறார்.

**★ பரதவர் இயல்புகளாகக் கூறுவன எவை?**

பரதவர் இறா மீனைச் சுட்ட தசையை உண்பர்; ஆமைப் புழுக்கு உண்பர். அடப்பம் பூவைச் சூடுவர்; ஆம்பல் பூவைப் பறித்து அணிவர்; நீலவானில் வலமாகச் சுழலும் கதிரோனைச் சுற்றிக் கோள் மீன்கள் வட்டமிடுவது போல நின்று போரிடுவர்; சீற்றங்கொண்டு தாக்குவர்; கவண் கல்லாலும் எறிவர்; அதற்கு அஞ்சிப் பனை மரத்தில் இருந்த பறவை பறந்து போகும்.

**★ புறச்சேரி பற்றி ஆசிரியர் கூறுவன எவை?**

புறச்சேரிக் குடியிருப்பில் பன்றிகள், குட்டிகளோடு திரியும். கோழிகள் காணப்படும்; உறைக் கிணறுகள் உண்டு; ஆட்டுக் கடாக்களோடு சிவல் பறவை விளையாடும்.

**★ காவிரித் துறைச் சிறப்புகளாக அறிவன எவை?**

நடுகல்லில் வழிபடு தெய்வமாக நின்றவனுக்குக் கேடயத்தையும் வேலையும் வரிசையாக வைத்ததுபோல நெடிய தூண்டில் கம்பைச் சுவரில் சார்த்தியிருப்பர்; நிலவின் ஊடு தோன்றும் இருள் போல மணல் முற்றத்தில் வலை உலரும்; சுறா மீனின் கொம்பை நட்டு அதனைக் கடல் தெய்வமாகக் கொண்டு வழிபடுவர். கள் பருகிக் களிப்பர்; தழையுடை அணிந்த தம் மனைவியரொடு முழு நிலவுப் பொழுதில் விரும்புவன உண்டு விளையாடுவர்; மலையைத் தழுவும் முகில் போலவும் தாயைத் தழுவும் மகவு போலவும் கடலோடு காவிரி கலக்கும் புகார்த் துறையில் நீராடுவர்; நண்டுகளைப் பிடித்தும் பாவை செய்தும் பகற்பொழுதெல்லாம் போக்குவர்; இவ்வாறு காவிரித்துறை விளங்கும் என்கிறார் கண்ணனார்.

**★ கடைசி யாமச் செயல்களாகப் பட்டினப்பாலை கூறுவதென்ன?**

கணவனோடு தழுவிய மகளிர் பட்டாடையை விடுத்து மென் துகில் அணிவர்; தேனுண்ணல் நீங்கி இன்பத் தேனில் திளைப்பர்; கணவன் சூடிய மாலையை மனைவியும், மனைவி சூடிய மாலையைக் கணவனும் மாற்றி மயங்கிச் சூடுவர்; கடலிற் கட்டுமரத்திற் சென்ற பரதவர் மாளிகைகளில் ஏற்றப்பட்ட விளக்குகளை எண்ணுவர்; நகரத்துள்ளார் முன் யாமத்தில் பாட்டுக் கேட்டும் நாடகம் கண்டும் உறங்காமல் பொழுதுபோக்கியவர் கடைசியாமத்தில் கண்ணுறக்கம் கொள்வர். இவை கடைசியாமச் செயல்களாகப் பட்டினப்பாலை கூறுவதாம்.

**★ அரசன் பொருளைக் காப்பவர் எப்படிக் காக்கின்றனர்?**

அரசன் பொருளைக் காப்பவர் அயர்வில்லாராய்க் காக்கின்றனர். இடைவிடாமல் சுழலும் கதிர்போல் சுற்றிச் சுழன்று காக்கின்றனர். வாங்க வேண்டிய 'உல்கு' என்னும் சுங்க வரியைத் தவறாமல் வாங்கிச் சேர்க்கின்றனர்.

**★ கலவணிகம் பற்றிக் கூறும் செய்திகள் எவை?**

கடலில் இருந்து முகந்த நீரை முகில் மலையில் பொழிவது போலவும், மலையில் பொழிந்த முகில் நீர் கடலைச் சேர்வது போலவும் பொருள்கள் அளவில்லாமல் நீரில் இருந்து நிலத்திலும், நிலத்தில் இருந்து நீரிலும் ஏற்றவும் இறக்கவும் படுகின்றன. எப்பொருளும் களவு போகாமல் காக்கப்படுகின்றன.

அனுப்பப்படும் பண்டங்கள் அனைத்தும் புலி முத்திரை இட்டு விடுக்கப்படுகின்றன. கடற்கரையில் குவிந்து கிடக்கும் பண்டக் குவியல்களின் மேல் மலை மேல் ஏறி விளையாடும் வரையாடு போல் நாய்கள், ஆடுகள் ஏறி விளையாடுகின்றன என்று கலவணிகம் பற்றிப் பட்டினப்பாலை கூறுகின்றது.

**★ புகார் நகரில் அங்காடித் தெரு எவ்வாறு விளங்குகின்றது?**

ஏணிகள், திண்ணைகள், சிறிய வாயில்களும் பெரிய வாயில்களும் உடையனவாய் மாளிகைகள் ஆகியவை பெருகியவாய் அங்காடித் தெரு விளங்கும். ஆங்குள்ள மாடங்களில் அழகிய மகளிர்கள் பவழம் போல் நிறமும் மயில்போல் தோற்றமும் மான்போல் பார்வையும் கிளிபோல் மழலையும் உடையவர்கள், அவர்கள் காற்று வரும் சாளரத்தினை நெருங்கி நின்று தொழுது நிற்பர்; குழல் இசைக்கவும் யாழ் ஒலிக்கவும் முழவு முழங்கவும் முரசம் அறையவும் இடையீடு இல்லாமல் விழாக்கள் அங்காடித் தெருவில் நிகழ்ந்த வண்ணம் இருக்கும்.

★ **நகரில் விளங்கும் கொடி வகைகள் எவை?**

கோயில் வாயில்களில் பலரும் வணங்குமாறு சேவற் கொடியும், விற்கப்படும் பண்டங்களின் விளக்கமாக ஆற்று மணல் மேல் பூத்த கரும்பின் பூப்போல் விளங்கும் கொடியும், அறிவு மேம்பட்டார் வாதிட்டு மெய்ப் பொருள் உணர்த்துவதற்காக எடுக்கப்பட்ட கொடியும், துறைமுகங்களில் கப்பல் மேல் கட்டப்பட்ட கொடியும், கள்ளுக் கடைகளில் ஏற்றப்பட்ட கொடியும், பிறபிற அறிவிப்புக் கொடிகளும் நிரம்பியிருத்தலால் கதிரின் வெயிலும் புகாவாறு நிழல் கொண்டிருக்கும்.

★ **தெருக்களில் விளங்கும் பொருள் வகைகள் எவை?**

அயல்நாடுகளில் இருந்து கப்பலில் வந்த குதிரைகளும்,
வண்டிகளிலே கொண்டு வரப்பட்ட மிளகுப் பொதிகளும்,
வடமலையில் இருந்து கொண்டு வந்த மணியும் பொன்னும்,
மேல் மலையில் இருந்து கொண்டு வந்த சந்தனம் அகில் கட்டைகளும்,
தென்கடலில் இருந்து எடுத்து வரப்பட்ட முத்துகளும்,
கீழ்கடலில் இருந்து எடுத்து வந்த பவழங்களும்,
கங்கைப் பொருள்களும்,
காவிரிப் பொருள்களும்,
ஈழத்தில் இருந்து வந்த உணவுப் பொருள்களும்

காழகம் என்னும் கடாரத்தில் இருந்து வந்த அரிய பல பொருள்களும் நிலப் பரப்பெல்லாம் தோன்றாமல் பரவிக் கிடக்கும்.

★ **அச்சமில்லாத வாழ்வு மக்கள் கொள்வதை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார்?**

பரதவர் முற்றங்களில் மீன்கள் உலாவித் திரிகின்றன. ஊன் விற்பவர் முற்றங்களில் ஆடு முதலாம் விலங்குகள் நடமாடித் திரிகின்றன. என்பதால் கொலைஞரும் கொடுமை புரியாமையைக் காட்டி நாட்டில் அச்சமில்லாமையை விளக்குகிறார்.

**★ மற்றைச் சிறப்புகளாக ஆசிரியர் கூறுவன எவை?**

வேள்விகள் சிறப்ப நடைபெறுகின்றன. விருந்தினராக வருவாரை மிகப் பேணுகின்றனர்; அறவொழுக்கமும் அன்பு நெறியும் உடையவராய் உழவர்கள் வாழ்கின்றனர்.

பொய் கூறாமல் மெய் கூறி, தாம் கொள்ளும் பொருளுக்குத் தக்க பொருளைத் தந்தும், தாம் கொடுக்கும் பொருளுக்கு மிகாமல் பொருளைப் பெற்றும் நுகக் கோலின் நடுவில் உள்ள ஆணியைப் போல் நடுவுநிலை உடையவராய் வாணிகம் செய்வார் விளங்குகின்றனர் என்று காவிரிப் பூம்பட்டினத்தின் மற்றைச் சிறப்புகளாக ஆசிரியர் கூறுகிறார். மேலும் பல நாட்டுப் பல மொழி பேசும் மக்களும் தமிழ் பேசும் மக்களொடு கலந்து உறவாடி மகிழ்ந்து வாழ்கின்றனர் என்பதை,

"மொழி பல பெருகிய பழிதீர் தேயத்துப்
புலம் பெயர் மக்கள் கலந்தினி துறையும்"
என்கிறார்.

**★ பட்டினச் சிறப்பை விரித்துரைத்த கண்ணனார் பாலையைப் பற்றி எவ்வாறு நயமாகச் சுருக்கிக் கூறுகிறார்?**

"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே"

என்று தலைவன் தலைவியைப் பிரிய மாட்டாதவனாய்த் தன் நெஞ்சிற்குக் கூறுவதாகக் கூறுகிறார்.

**★ சுருக்கிக் கூறிய இத்தொடரில் அமைந்துள்ள நயம் யாது?**

முட்டருஞ் சிறப்பு = முட்டுப்பாடு என்பது எதுவும் நெருங்காத சிறப்பு.

ஊணா, உடையா, உறைவா, வேண்டும் பிறபிறவா, அறநெறியா, அன்பு வாழ்வா எல்லாம் எல்லாம் குறைவற எவர்க்கும் எங்கும் வாய்க்கும் சிறப்பு முட்டாச் சிறப்பாம். இம்முட்டாச் சிறப்பால் ஓங்கியது காவிரிப்பூம்பட்டினம்.

அப்பட்டினத்தில் உறையும் பேறே பெரிது; அதில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து விரும்பியவனை மணந்து இல்லறம் பூண்டு, நிறை வீடு பேறாகச் சிறப்பது தனிப்பேறு. அவ்வாறாகவும் அப்பட்டினத்தையே வேந்தன் கரிகாலன் பரிசாகத் தந்தான் எனினும் அவ்வின்பம் உன்னைப் பிரிந்து போய் வாழ நேருங்கால் – பிரிதலை எண்ணுங்கால் எண்ணும் நெஞ்சம் வேம்! உடலம் வேம்! உயிரும் வெம்பிச்சாம். அப்படிச் செய்வன எவை?

உன்னைக் கண்டு ஒப்ப நோக்கி ஒன்றுபட்ட போதில் முதல் உடன் பாட்டு மெய்ப்பாடாக உன் கூழை விரித்தாயே, காதொன்று களைந்தாயே அவற்றை மறக்க முடியுமா? கூழைதானே கூந்தல் எனப் பெயர் கொண்டது; நீண்டு தழைத்தது; கரு முகிலாய்ப் பரந்து படிந்தது! அக்காதணிதானே தலையணி முதல் காலணி ஈறாகப் பல்லணிகள் பூண்டு கொள்ளை கொள்ளும் நிலை ஆயது! ஆதலால், பொருள் தேடப் போமாறு வலிந்து இழுக்கும் நெஞ்சமே யான், நீ என்னபாடு என்னைப்படுத்தினாலும், வரமாட்டேன்! நீ பிரிவுக் கொடுமைக்குத் தூண்டினாலும் அத்தூண்டுதல் தானே நேயப் பெருக்காய் வெள்ளமாய்ச் சிறக்கச் செய்கின்றது. அதனால் எக்குறையும் இல்லாமல் என்றும் இனிது வாழ்வாயாக! என்பவை ஓரளவால் அறியும் நயமாம்!

**★ பட்டினத்தைக் காவிரி முதல் கூறிய ஆசிரியர், பாலையைக் கூறிய அவர் பின்னும் விரிப்பானேன்?**

பாட்டுடைத் தலைவனாம் திருமாவளவனைப் பற்றிக் கூறினார் அல்லரே! அவன் வீறும் வெற்றியும் பேறும் பெற்றியும் கூறித்தானே ஆக வேண்டும். இல்லையானால் பெயர் சுட்டப்படா எவரோ ஒரு வேந்தரை எண்ணிக் கொள்ளத்தானே வைக்கும். 'பிரியேன்' என்றவன் பிரியாமல் இருக்க மாணத் தடையாம் ஒன்றைச் சுட்டாமல் விட்டானாகவும் ஆகுமே; ஆதலால் மேலும் தொடுத்தார். மேலும் எண்பத்தோர் அடிகள் தொடுத்தார். முன்னை நெறி மாறாமல் பின்னை நெறியைப் பாடினார். 79 அடிகள் புறப்பொருளும், இரண்டே இரண்டு அடிகள் அகப்பொருள் சிறக்கவும் பாடினார்.

**★ கரிகாலன் பெருமிதத்தைக் கடியலூரார் எவ்வாறு கூறுகிறார்?**

கரிகாலன் தாய் வயிற்றில் இருக்கும்போதே தந்தையை இழந்தவன். உறவுப் பகையால் இளமையிலேயே சிறைப்படுத்தப்பட்டவன். படுகுழிப்பட்ட யானை கரையைக் குத்திச் சரித்து மேடேறித் தன் பிடியொடு சேர்ந்தது போலப் பகைச் சிறை வென்று அரிமாப் போல அரசு கட்டில் ஏறியவன் என்கிறார்.

"கூருகிர்க்,
கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்
பிறர், பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி
அருங்கரை கவியக் குத்திக் குழி கொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு
நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
செறிவுடைத் திண்காப் பேறி வான்கழித்
துருகெழு தாயம் ஊழின் எய்தி"னான்

என்கிறார்; செறிவுடைத் திண்காப் பேறி என்றமையால் காவல் மிக்க மதிலுள் அடைக்கப்பட்டிருந்தான் என்பது புலப்படும்.

**★ குறிக்கப்பட்ட பாடல் அடிகளால் அறியப்படும் செய்திகள் எவை?**

கூருகிர்க் கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு என்பதால் கூரிய நகங்களையும் வளைந்த வரிகளையும் உடைய புலிக்குட்டி கூட்டுள் வளர்ந்தது போல வளர்ந்தான் என்பதும், பெரிய வலிய குழியின் கரையைக் கொம்பால் குத்தி யானை வெளிப்பட்டுத் தன் பெண் யானையொடு கூடியது போல அரசு எய்தினான் என்பதை,

"அருங்கரை கவியக் குத்திக் குழி கொன்று
பெருங்கை யானை பிடிபுக் காங்கு"
என்று கூறினார்.

வலிய மதிலுள் சிறை வைத்தார் என்றும், அவர் பகையாயினார் என்றும், அம்மதிலைத் தன் வாள் வலியால் தடுத்தோரை அழித்து மேலேறிக் கடந்தான் என்றும், முறையாக ஆள வேண்டிய ஆட்சி உரிமையன் அவன் என்றும் அவன் இளந்தை வரலாற்றை எடுத்துரைத்தார் என்க.

நண்ணார் = பகைவர்; ஊழ் = முறைமை.

**★ அரசுரிமை பெற்ற திருமாவளவன் மேலே என்ன செய்ததாகக் கூறுகிறார்?**

அரசுரிமை பெற்றது போதும் என மகிழ்வோடு அமைந்தான் அல்லன். பகைவர் அரண்களை அழித்தான். அவர்கள் யானை, குதிரை, காலாள்களை ஒரு சேர அழித்தான். வயல்களையும் நீர் நிலைகளையும் பாழ்படுத்தினான். காடுகளை அழித்தான்; காட்டு யானைகள் ஊர் மன்றில் உலாவின; கிளிகள் பேசி மகிழ்ந்த வீடுகளில் கோட்டான்கள் கூடி ஒலித்தன; இவ்வாறு பகைகளைப் பழி வாங்கினான்.

**★ பகைவர் கொண்ட அச்சத்தை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார்?**

“இவன் மதிலை இடித்துப் பொடியாக்குவான்;
கடலை மண்ணாலும் கல்லாலும் மூடி மேடாக்குவான்;
வானத்தையும் இடித்து முட்டுவான்;
காற்றின் திசையையும் மாற்றி வீச வைப்பான்”

எனப் பகைவர் அஞ்சுவர் என்பதைக் குறிக்கிறார்.

**★ திருமாவளவன் எவ்வெவரை வென்றான் என்கிறார் கடியலூரார்?**

ஒளி நாட்டவர் பணிந்து ஒடுங்கவும்,
பழமைமிக்க அருவாள நாட்டவர் ஏவல் கேட்டு நிற்கவும்,
வடநாட்டவர் என்ன நேருமோ என வாட்ட முறவும்,
குடநாட்டவர் உள்ளம் கூம்பி வாடவும்,

தென்னவனாம் பாண்டியன் தன் வலிமை குன்றவும்
முல்லை நாட்டவர் வழியற்றுப் போகவும்,
இருங்கோவேளின் இனத்தவர் அழிந்துபடவும்,
வெற்றி கொண்டான் என்கிறார் ஆசிரியர்.

**★ அழித்த நாடுகளில் கரிகாலன் என்ன செய்தான்?**

தான் அழித்த நாடுகளில், காடுகளை அழித்து நாடாக்கினான். குளங்களை ஆழமாகத் தோண்டி வளம் பெறச் செய்தான். உறையூரை விடுத்து, கோயில்களையும் மாடங்களையும் உண்டாக்கி மக்களைக் குடியேற்றினான். கோட்டைகளையும் பெருவாயில் சிறுவாயில்களையும் அமைத்தான். மதில்களில் அம்பு எய்யும் ஏப்புழைகளை உண்டாக்கினான், பகைவர் எவராயினும் வருக; யாவின் அழித் தொழிப்பேன் என வஞ்சினம் கூறினான். அவன் வலிமைக்கு அஞ்சிய வேந்தர் அவன் அருளுதலுக்குக் காத்துக் கிடந்து வழிபட்டனர் என்று கூறுகிறார்.

**★ கரிகாலன் அகவாழ்வு பற்றி ஆசிரியர் என்ன இயம்புகிறார்?**

மக்கள் ஓடி ஆடி மகிழ்கின்றனர்; மனைவியர் தழுவி மகிழ்கின்றனர்; பகைக்கு மாறான அவன், குடும்ப வாழ்வில் குழைவுடையவனாக விளங்குகிறான் எனச் சுருங்க உரைக்கிறார்.

**★ எடுத்துக் கொண்ட பாலையை கணவன் பிரிதலை விடுத்த பாவலர் தொடுத்து எப்படி முடிக்கிறார்?**

“அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே”

எனத் தலைவன் வினைமேற் செலவு விடுத்ததாகப் பாடலை நிறைவு செய்கிறார்.

★ **நிறைவு அடிகளின் சிறப்புகள் எவை?**

அரச யானைகளைத் தன் முழக்கத்தாலும் வலிமையாலும் வருந்தச் செய்யும் அரிமாவைப் போன்றவன் திருமாளவன் என்று அவன் வரலாற்றைப் பிழிசாறாகத் தருகிறார் பாவலர். பகைவர் திருவனைத்தையும் கொள்ள வல்ல வளமிக்கான் என்பதைத் 'திருமாவளவன்' என்னும் பெயர் கூறும் வகையால் தெளிவிக்கிறார்.

அவன் வேல் பகையை அழிக்கும் கொடுமையைப் பாலை நிலத்தின் வெம்மைக்கு ஒப்பிடுகிறார். அவ்வாறே அவனை அடைந்து அருள் வேண்டினார்க்கும் தன் குடியினர்க்கும் செங்கோலனாகத் திகழும் தண்மையைக் குறிப்பிடுகிறார்.

தலைவன் வாக்காகத், திருமாவளவன்,
“வேலின் வெம்மையும்
கோலின் தண்மையும்”
விளக்கம் பெற வைக்கிறார்.

தலைவியைப் பிரிதல் வகையால் உண்டாகும் உளவெப்பை அடையமாட்டேன்; அவன் கோலின் தண்மை போன்ற தலைவியின் கூடுதலை இழக்கமாட்டேன் என்று சொல்கிறான்.

★ **வாழ்வியல் நிலை இவ்வாறானால் சிறக்குமா?**

“வினையே ஆடவர்க்கு உயிரே” என்பது தொன்முறை வாழ்வியல். ஆதலால் வினைமேல் செல்லாமல் தடையுறல் ஆகாது. அதனால் செல்லேன் எனச் சொல்லி அவளை அமைதிப்படுத்தி, வினை செயல் இன்றியமையாமை, பொருளின் இன்றியமையாமை என்பவற்றைத் தக்க வகையில் எடுத்துரைத்துப் பிரிதற்குரிய உளவியல் உத்தி இத்தகு படைப்பாகும். “செல்லேன் என்னல் செல்லாமைக்கு அன்று; செலவு உடன் படற்குச் செய்யும் முன்முயற்சியாம்” என்பது வாழ்வியல் இலக்கணமாக வகுத்த தமிழ அறவோர் காட்டிய முறைமை இஃதாம்.

★ **பாலைப் பகுதியை இணைத்துக் காட்டுக.**

"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன்"

"திருமாவளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே"

★ **இச்சுருங்கிய அகத்தை விரிக்க இவ்விரிந்த 'புறம்' வேண்டுமா?**

வேண்டும்; வேண்டுவ துணர்ந்தே பாடினார்.

புணர்தலாம் கூடியிருத்தலுக்குக், "குறிஞ்சி கூதிர் யாமம்" என்றார் தொல்காப்பியர். நாளில் யாமம் என்பது எவ்வளவு பொழுது? மற்றைப் பொழுது எவ்வளவு?

முல்லை, இருத்தல் தானே!
மருதம், ஊடல் தானே!
நெய்தல், இரங்கல் தானே!
பாலை, பிரிதல் தானே!

உலகம் உய்வுற வகுத்த செம்முறை, இம்முறை என்பதைத் தெளிவாக எண்ணின் உண்மை புலப்படும்! அதற்கு மாறாம் படைப்பு - காட்சி - ஆயவை வாழ்வியல் கேடாம் என்பதும் தெள்ளத் தெளிவாக விளங்கும்.

# மூதறிஞர்
# இரா.இளங்குமரனாரின்

## பழந்தமிழ் நூல்கள் வெளி வந்த பட்டியல்

1. தொல்காப்பியம்

௨. திருக்குறள்

௩.திருமுருகாற்றுப்படை

4. பொருநர் ஆற்றுப்படை

௫. சிறுபாணாற்றுப்படை

௬. பெரும்பாணாற்றுப்படை

7. முல்லைப்பாட்டு

௮.மதுரைக் காஞ்சி

௯. நெடுநல்வாடை

10.குறிஞ்சிப்பாட்டு

11.பட்டினப்பாலை

1௨.மலைபடுகடாம்

ஆக்கம் : பெரியார்

நன்கொடை ரூ.15/-

அறிமுக நூல் – 11

# பட்டினப்பாலை



இரா.இளங்குமரனார்

ஆக்கம் பெரியார்